
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1213**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

**161**

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த குளித்தலை சிவராமன் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# குளித்தலை சிவராமன் ‘தங்க ஆபரணம் தந்த தம்பி!’

1957-ஆம் ஆண்டு, கழகம் முதல்முறையாகத் தேர்தலை சந்திக்கிறது. குளித்தலை தொகுதியில் போட்டியிட்ட முத்தமிழறிஞர் கலைஞர், தேர்தல் பிரச்சாரத்தில், வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிக்கும் புதிய முறையைக் கொண்டு வந்தார். கூடவே, ஒரு வீட்டில் வாக்கு சேகரிக்கும்போது அந்த வீட்டின் கதவில் ‘எங்கள் ஓட்டு எங்கள் வீட்டுப்பிள்ளை கருணாநிதிக்கே’ என்ற வாசகமும் உதயசூரியன் படமும் பொறிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களை ஒட்டிவிடுவார்கள். இதற்காகவே, கலைஞர் பிரசாரத்துக்குச் செல்லும்போது, கூடவே பசை வாளி மற்றும் துண்டுப் பிரசுரங்களுடன் தொண்டர்கள் சுற்றிச்சுற்றி வருவார்கள். அப்படி, அவரது பிரச்சாரத்தில் கூடவே சுற்றிய பல இளைஞர்களில் ஒருவர்தான் குளித்தலை சிவராமன். கலைஞர் அடையாளம் கண்ட, கலைஞர் வளர்த்த உடன்பிறப்புகளில் ஒருவர்.

குளித்தலை அருகே அய்யர்மலை கிராமத்தில், 1942 டிசம்பர் 3-ஆம் தேதி பிறந்தவர் சிவராமன். பெற்றோர் அய்யாதுரை - பர்வதாம்மாள். இராணுவத்தில் கார் ஓட்டுநராகப் பணியாற்றிய, அய்யாதுரை அவர்கள் குடும்பத்தில் அனைவருக்கும் ஒட்டுநர் பயிற்சி அளிக்க, சிவராமன் அவர்களும் தொடக்கக்கல்வி கற்ற பின்னர், கார் ஓட்டுநராகப் பணிபுரிந்தார்.

1957-ஆம் ஆண்டில், குளித்தலையில் கலைஞரின் தேர்தல் பிரச்சார வாகனத்துக்கு ஓட்டுநராகவும் பணியாற்றியவர் அய்யாதுரை. அப்படி கிடைத்த தொடர்புகளின் மூலம், கழகத் தலைவர்களுடன் தொடர்பு ஏற்பட, இளம் வயதிலேயே தி.மு.கழக ஆதரவாளராக வலம் வரத்தொடங்கினார் சிவராமன். குறிப்பாக, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சொற்பொழிவுகளால் ஈர்க்கப்பட்டவர், குளித்தலை ஒன்றியத்தில் 1960-ஆம் ஆண்டுகளிலேயே கழகப் பணிகளில் ஈடுபடத் தொடங்கினார்.

### நகரச் செயலாளராக...


1963-ஆம் ஆண்டு, விலைவாசி உயர்வுப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் பங்குபெற்றவர். ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பிலார், குளித்தலை முத்துக்கிருஷ்ணன் உள்ளிட்ட முன்னோடிகளுடன் இணைந்து செயல்பட்டார். 1971-ஆம் ஆண்டு, குளித்தலை நகரச் செயலாளராகப் பொறுப்பேற்றவர், 1988 வரை 18 ஆண்டுகள் அந்தப் பொறுப்பில் இருந்தார். ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளராகவும் பணியாற்றினார். மேலும், ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட துணைச் செயலாளராகவும் கரூர் மாவட்ட விவசாய அணி செயலாளராகவும், மாவட்ட தி.மு.க. பொருளாளராகவும் பணியாற்றினார். 1986-ஆம் ஆண்டு முதல் 1991 வரை குளித்தலை ஒன்றியப் பெருந்தலைவராகப் பணியாற்றினார்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மீதும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீதும் அளப்பரிய பற்றும் பாசமும் கொண்ட பண்பாளர். 1982-ஆம் ஆண்டில், இவர் குளித்தலை நகரக் கழகச் செயலாளராக இருந்தபோது, குளித்தலையில் இருந்து, கலைஞர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு, 25 ஆண்டுகள் ஆனதையொட்டி, திருச்சி மாவட்டக் கழகச் செயலாளர் அன்பிலார் அவர்கள் தலைமையில், குளித்தலை காவிரி ஆற்றங்கரையில் வெள்ளி விழா நடத்தி, 60 பவுன் தங்கக்காசுகள் கொண்ட ஆபரணத்தை வழங்கினார்கள். அந்த தங்கக்காசுகளை கலைஞர், அந்த மேடையிலேயே ஏலம்விட்டு, கழக வளர்ச்சி நிதியில் சேர்த்த வரலாற்றினை ‘நெஞ்சுக்கு நீதி’யில் குறிப்பிட்டிருப்பார்.

### மக்கள் பணியில்...

குளித்தலை நகர கூட்டுறவு வங்கித் தலைவராக மூன்று முறையும், திருச்சி மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநராகவும், பணியாற்றினார். அப்போது நஷ்டத்தில் இயங்கி வந்த குளித்தலை நகர கூட்டுறவு வங்கியை லாபமடையச் செய்வதற்காகவும், கழக அரசின் மகளிர் சிறு வணிகக் கடன் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திய தற்காகவும் அரசு சார்பில், ‘சிறந்த கூட்டுறவாளர்’ பட்டம் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு, 13 முறை சிறை சென்றுள்ளார். போராட்டங்களின்போது திருச்சி மாவட்ட மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட ஒவ்வொரு முறையும், நாகை, திருவாரூர், தஞ்சாவூர் உள்ளிட்ட ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டம், திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர் உள்ளிட்ட ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த கழகத்தினருக்கு உதவிகள் செய்து, கலந்துரையாடி அனைவரின் அன்பையும் பெற்றார்.




இவர், ஒன்றியப் பெருந்தலைவராகப் பொறுப்பில் இருந்த காலகட்டத்தில், குளித்தலை பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான ‘சூரியனூர் பாலம்’, ‘வாளந்தூர் பாலம்’, ரத்தினத்தாம்பட்டி பாலம் ஆகிய திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தார்.

இவருடைய கழகப் பணி மற்றும் பொதுப்பணியினை அடுத்தகட்டத்துக்கு நகர்த்த விரும்பிய கலைஞர், 1989-ஆம் ஆண்டு நடந்த சட்டசபைத் தேர்தலில் குளித்தலை தொகுதியில் போட்டியிட வாய்ப்பு அளித்தார்.

> 60 பவுன் தங்கக்காசுகள் கொண்ட ஆபரணத்தை வழங்கினார்கள். அந்த தங்கக்காசுகளை கலைஞர், அந்த மேடையிலேயே ஏலம்விட்டு, கழக வளர்ச்சி நிதியில் சேர்த்தார்.

முத்தமிழறிஞர் அவர்களின் நீதி கேட்டு நெடிய பயணத்தில் கலந்துகொண்டு முழுமையான தூரத்திற்கும் உடன் நடந்து சென்றவர். திருச்சி மாவட்டத்தில் நடைபெற்ற மாநில அளவிலான இரண்டு மாநாடுகளில் வரவேற்புக்குழுச் செயலாளர்களில் ஒருவராகப் பணியாற்றினார். கலைஞர், பேராசிரியர் எனப் பலருடனும் நெருங்கிய பழக்கம் கொண்டிருந்தவர், செயற்குழுக் கூட்டங்களில் கட்சியின் மேம்பாட்டிற்காகத் தனது கருத்துகளைத் தெரிவித்து, முத்தமிழறிஞரின் பாராட்டுகளைப் பலமுறை பெற்றுள்ளார்.

கட்சியிலும் மக்கள் பணியிலும் கழக உணர்வுடன் அர்ப்பணித்துக்கொண்டு பணியாற்றிய சிவராமன் அவர்களை 2005-ஆம் ஆண்டில், இந்திய உணவுக் கழகத்தின் தமிழ்நாடு மாநில ஆலோசனைக் குழு உறுப்பினராக்கினார் கலைஞர். வயது மூப்பு நிலையிலும், கழகத்தின் அடுத்த தலைமுறையினருக்கு அரசியல் வழிகாட்டியாக இருந்த சிவராமன் அவர்களுக்கு 2025-ஆம் ஆண்டிற்கான கழக முப்பெரும் விழா விருதுகளில் ‘பாவேந்தர் பாரதிதாசன்’ விருது அறிவித்தது கழகம். ஆனால், எதிர்பாராத வகையில், ஆகஸ்ட் 28 அன்று இயற்கை எய்தினார்.

“கரூரில் நடைபெறவுள்ள கழக முப்பெரும் விழாவில், அவரை நேரில் கண்டு ‘பாவேந்தர் பாரதிதாசன்’ விருதினை வழங்கி, அவர் கரம் பற்றிக்கொள்ள ஆவலுடன் நான் காத்திருந்தேனே” எனக் கழகத் தலைவர் எழுதிய இரங்கல் கடிதம், கழகத்தினர் துயரத்தினைப் பகிர்ந்துகொண்டது. “அவரது வாழ்க்கையும் பணியும் இன்றைய கழகத்தினர் அனைவரையும் வழிநடத்தும்” எனக் கழகத் தலைவர் எழுதியதுபோல, சிவராமன் என்றும் வழிநடத்துவார்.

...துடிக்கும்

## மக்களின் ஆணைக்குத் துரோகம்!

அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் சிலர், தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, த.வெ.க.வில் இணைந்திருப்பது குதிரை பேரத்தை உறுதி செய்வதாக, சமூக ஊடகங்களில் பலரும் கண்டித்திருக்கும் சூழலில், வெகுசன ஊடகங்கள் பலவும் இவ்விவகாரத்தில் மௌனம் காக்கின்றன. இந்நிலையில், ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் இதுதொடர்பாகத் தனது கடுமையான கண்டனத்தைப் பதிவு செய்துள்ளது.

“வாக்காளர்களின் விரலில் வைக்கப்பட்ட மைகூட இன்னும் அழியாத நிலையில், தமிழக வெற்றிக் கழகம் தமிழ்நாட்டு அரசியலில் கவலைக்கிடமான ஓர் அரசியல் நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இது கர்நாடகத்தில் முதன்முதலில் பா.ஜ.க. பயன்படுத்திய ‘ஆபரேஷன் லோட்டஸ்’ முறைக்கு மிகவும் ஒப்பு நோக்கத்தக்கதாக உள்ளது. தன்னை ‘தூய்மையான அரசியல் சக்தி’ என விளம்பரப்படுத்திக்கொண்ட த.வெ.க., பா.ஜ.க. பயன்படுத்திய அதே அரசியல் யுக்தியையே பின்பற்றியுள்ளது. ராஜினாமா செய்துவிட்டு, த.வெ.க.வில் இணைந்தவர்கள் தேர்தலில் போட்டியிடுவார்களா என்பதைக் கடந்து, இதன் நோக்கம் ‘ஆயா ராம், காயா ராம்’ என்ற குதிரை பேர அரசியலிலிருந்து வேறுபட்டதல்ல.

அவர்களின் ராஜினாமாவை சபாநாயகர் ஏற்றுக்கொண்டது மக்களின் தீர்ப்பை வெறும் 21 நாட்களிலேயே அவமதிப்பதாக உள்ளது. அவர்களைத் தகுதி நீக்கம் செய்ய வேண்டிய மனுக்கள், சபாநாயகரிடம் நிலுவையில் இருந்த நேரத்திலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பலவீனமான கூட்டணி ஆட்சி அமைந்திருப்பதால், எதிர்காலத்தில் தங்களுக்கு சவாலாக இருக்கும் கூட்டணிக் கட்சிகளை, வெளியேற்றத் திட்டமிடுவதும் இதன் மூலம் தெளிவாகிறது. இப்படி ராஜினாமா செய்தவர்களுக்கு உடனடியாக நடைபெறும் இடைத்தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்கும் ‘கூலிங் பீரியட்’ போன்ற நடைமுறைகள் கொண்டு வரப்பட வேண்டும். இல்லையெனில், ராஜினாமாவுடன் கூடிய இத்தகைய கட்சித் தாவல்கள் ஜனநாயக செயல்முறைகளைச் சீர்குலைப்பதாகவே பார்க்கப்படும்’’ என்கிறது அந்தத் தலையங்கம்.

## ஃப்ளாஷ்பேக்



எம்.சண்முகம்



### அறிமுகம் கேட்டு, மகிழ்ந்த தலைவர்!

2011-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது. தலைவரைப் பார்க்கச் சென்ற நேரத்தில், அனைவருக்கும் தேநீர் வழங்கச் செய்து, அறிமுகங்களைக் கேட்டு மகிழ்ந்தார். அந்த இனிமையான தருணத்தின்போது, தற்போதைய கழகத் தலைவர் அவர்களும் உடனிருந்து, அனைவரிடமும் தனித்தனியாக அறிமுகம் கேட்டுக்கொண்டு, கழகப் பணியில் சிறப்பாகச் செயல்பட வாழ்த்தினார். ‘தமிழர்களே... தமிழர்களே...’ எனும் முத்தமிழறிஞரின் குரல் ஆழ்மனதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

**– எம்.சண்முகம், 37-வது வட்ட பொருளாளர், பெரம்பூர் வடக்குப் பகுதி, சென்னை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### தி.மு.க.வும் மற்ற கட்சிகளும்...

1954-ஆம் ஆண்டு, செப்டம்பர் 18, 19 சனி, ஞாயிறுகளில், நெல்லை மாவட்ட தி.மு.க. 2-வது மாநாடு பாளையங்கோட்டையில் நடைபெற்றது. அப்போது கழகத்தில் இருந்த கவிஞர் கண்ணதாசன், மாநாட்டில் உரையாற்றினார். “தி.மு.கழகம் உடற்கூறு நிபுணன் போன்றது; மனோதத்துவ அறிஞன் போன்றது. அதனால்தான் மற்ற நாட்டுச் சீர்திருத்தவாதிகள் கொல்லப்பட்ட இடத்திலே, தன் கொள்கைகளை ஆரம்பித்துக்கொண்டு வளர்கிறது; வளர்கிறது - வெற்றிப்பாதையில் வளர்ந்துகொண்டுபோகிறது. மற்ற கட்சிகளுக்கும் தி.மு.கழகத்துக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு இதுதான்’’ என்று விளக்கினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900